செ.வெ.எண்: 306

26/5/2011

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு பி.வி.ரமணா அவர்கள், 26.05.2011 மாலை 3.00 மணி அளவில் கைத்தறித்துறை உயர் அதிகாரிகளுடன் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வினை மேற்கொண்டார். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் தேர்தல் அறிக்கையில், நலிவடைந்த கைத்தறித்துறையை சீர்படுத்தி, கைத்தறி கூட்டுறவு சங்கங்களை மீண்டும் சீரமைத்து, நெசவாளர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுத்து, கிராமங்களில் புதிய டிசைன்களில் ஆடைகள், உடைகள், வீட்டு அலங்கார பொருட்கள் ஏற்றுமதிப் பொருட்களாக உருவாக சிறப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், 10 ஆடை அலங்காரப் பூங்காக்கள் ( Apparel Parks) உருவாக்கப்படும் என்றும், கைத்தறிப் பொருட்கள் ஏற்றுமதிக்கு ஏற்றவகையில், கைத்தறி ஏற்றுமதி நிறுவனம், அரசு மற்றும் தனியார் பங்கேற்பு முறையில் ( PPP) உருவாக்கப்படும் என்றும், கைத்தறித் துறைக்கென அளித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்ற எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுக்கு அமைச்சர் தக்க அறிவுரைகள் வழங்கினார்.

கைத்தறித் துறையின் கீழ் செயல்படும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சி, கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடு, நெசவாளர்களுக்கான நலத்திட்டங்களின் செயலாக்கம், விசைத்தறி, ஜவுளித் தொழில் மேம்பாடு உள்ளிட்ட அனைத்தையும் சீரமைக்கும் வகையில் மாநில அளவில் உயர்மட்டக் குழு அமைப்பது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இலவச பள்ளிச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தரமான சீருடைகளை ரூ.50.00 கோடியில் நடப்பாண்டில் குறித்த காலத்திற்குள் வழங்க விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கான உற்பத்தியை விரைவில் துவக்கி பொங்கல் 2012 பண்டிகையை முன்னிட்டு குறித்த காலத்திற்குள் ஏழை மக்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனையை மேம்படுத்தவும், இலாபகரமாக செயல்படுத்தவும் திட்டம் தயாரித்து வழங்கவும் ஆலோசனை கூறப்பட்டது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், கைத்தறித் துறை செயலாளர் திரு.சி.முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., கைத்தறித் துறை இயக்குநர் திரு.வெ.சந்திரசேகரன், இ.ஆ.ப., துறை உயர் அலுவலர்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை

இயக்குநர்